# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/33 - 2017 ජනවාරි මස 18 වැනි බදාදා - 2017.01.18

*2002/33 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (XV)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *27 (1)* ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் *139* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, (*2016*, ஒற்றோபர் மாதம் *26* ஆந் திகதிய *1990/16* ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) சொல்லப்பட்ட சட்டத்தின் *21* ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாக கருதப்படுகின்ற கட்டளையான இலங்கை, பேராதனை பல்கலைக்கழகத்தை தாபிக்கின்ற *2007*, பெப்புருவரி மாதம் *02* ஆந் திகதிய *1482/26* ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் I ஆம் நிரலிலுள்ள “பொறியியல் பீடம்” என்னும் விடயத்திற்கு நேரொத்ததான அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படுகின்ற “*8*. உற்பத்திப் பொறியியல் துறை” என்னும் பதிவிற்கு பதிலாக பின்வரும் பதிவினை இடுவதன் மூலம் இக்கட்டளையை திருத்துகின்றேன் :-

“*8*. உற்பத்தி மற்றும் கைத்தொழில்சார் பொறியியல் துறை”.

லக்ஷ்மன் கிரியெல்ல,<br>
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,<br>
*2016*, திசெம்பர் *31*.

*02- 100*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*